**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)**
**VANIYAMBADI**

**PG & RESEARCH DEPARTMENT OF TAMIL**

**II B.A., TAMIL – SEMESTER – 1V**

**E-NOTES (STUDY MATERIAL**

| |
|---|
| **C - Course - 2 நன்னூல்**<br>**Code : 23UTA42** |
| Unit : **2 வினையியல்** |
| Learning Objectives :<br>**வேற்றுமை உருபுகள் சொல்லின் பொருளை மாற்றும் தன்மையை அறிந்து பொருளுக்கு ஏற்ப உறுப்புகளைப் பயன்படுத்த கற்றுக் கொள்ளுதல்** |
| **Coures Outcome:**<br>**சொல் வகைகள், அமைப்பு பற்றி அறிவர்.** |

**Overview**

**ஒரு மொழிக்கு இன்றியமையாத உறுப்பாக விளங்குவது வினைச்சொல் ஆகும். ஒருபொருளின் புடைபெயர்ச்சியை வெளிப்படுத்துவது வினைச்சொல் எனப்படும். வினைச்சொல் ஒரு செயலின் காலத்தைக் காட்டுவதாக அமையும். இதன் காரணமாக அது தெளிவாகவும் காலம் காட்டும். குறிப்பாகவும் காலம் காட்டும் வினைச்சொல்லின் இலக்கணத்தைச் சொல்லும் இயல் வினையியல் ஆகும். இவ்இயல் 32 நூற்பாக்களை உடையது.**

அலகு - 2 வினையியல்

வினைச்சொல் என்பது ஒரு பொருளின்/ஒன்றன் வினையை உணர்த்துவதாகும்

1. ஒரு வினைச்சொல் தெளிவாகக் காலம் காட்டினால் அதனைத் தெரிநிலை வினை என்று குறிப்பர்.

2. ஒரு வினைச்சொல் குறிப்பாகக் காலத்தை உணர்த்துமானால் அது வினைக் குறிப்பு எனப்படும். இது செய்பவன் முதலான ஆறனுள் வினை முதலாகிய கருத்தாவை மட்டும் வெளிப்படையாகக் காட்டும். காலத்தையும் தொழிலையும் குறிப்பாகக் காட்டும்.

முடிவு பெற்ற வினைச்சொல் "முற்று" எனப்படும்.
முடிவுறாத வினைச்சொல் "எச்சம்" எனப்படும்.

முற்று:

செயல் முற்றுப் பெற்றதைக் குறிக்கும் வினைச்சொல் முற்று.

1. தெரிநிலை வினைமுற்று
2. குறிப்பு வினைமுற்று

1. தெரிநிலை வினைமுற்று:

"ஓவியர் ஓவியம் தீட்டினார்" இத்தொடரில் "ஓவியன்" என்பது உயர்திணை என்றும், அவர் "ஆண்பால்"-என்பதும்,"இறந்தகாலம்"- என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

மேலும்,

| | |
|---|---|
| செய்பவன் | - ஓவியன் |
| கருவி | - தூரிகை வண்ணம் |
| நிலம் | -சுவர்(அ)திரைச்சீலை(அ)காகிதம் |
| செயல் | - தீட்டுதல் |
| செயல்பொருள் | - ஓவியம் |
| காலம் | - இறந்த காலம் |

இவ்வாறு செய்வபன் , கருவி, நிலம், செயல், செயல்பொருள், காலம், இவற்றை தெளிவாக உணர்த்துவது தெரிநிலை வினைமுற்று.

குறிப்பு வினைமுற்று:

திணை,பால், மட்டுமே வெளிப்படையாக காட்டுவது குறிப்பு வினைமுற்று. இதில் காலம் குறிப்பாக வரும்.

(எ.கா) "எழிலன் இனியன்"

இதில் இனியன் என்பது குறிப்பு வினைமுற்று. தொழில், காலம் வெளிப்படையாக காட்டப்படவில்லை. இனிய பண்பை உடையவனாக இருந்தான், இருக்கிறான், இருப்பான் எனக் குறிப்பால் காலத்தை உணர்த்துகிறது. இவ்வாறு செய்பவனை மட்டும் வெளிப்படையாக உணர்த்தி, பிறவற்றைக் குறிப்பாக உணர்த்தும் வினைக்குற்று குறிப்பு வினைமுற்று ஆகும். அறுவகை பெயர்களின் அடிப்படையில் குறிப்பு வினை முற்று வரும். அவை பின்வருமாறு,

| | |
|---|---|
| புகழேந்தி பொன்னன் | - பொருள் |
| அங்கையற்கன்னி மதுரையாள் | - இடம் |
| செல்வி திருவாதிரையாள் | - காலம் |
| வள்ளல் செங்கண்ணன் | - சினை |
| எழிலன் இனியன் | - பண்பு |
| அகிலன் நடிகன் | - தொழில் |

எச்சவினை (அ) எச்சம்:

தமிழில் சொல்லோ, சொல்லின் பொருளோ முழுமைப் பெறாமல் குறைந்து நிற்பதை "எச்சம்" எனும் சொல்லால் குறிக்கப்படுகின்றன.

“எஞ்சு பொருட் கிளவி” - தொல்காப்பியம்.

பொருள்: எஞ்சிய, அதாவது சொல்லாமற் குறைபட்ட பொருளைக் குறிக்கும் சொல்.

வகைகள் :

பெயரெச்சம்

வினையெச்சம்

பெயரெச்சம்:

பெயர்ச்சொல்லை ஏற்று முடிவுறும் எச்ச(முடிவுறா) வினைச்சொல் ஆகும். காலத்தையும், செயலையும் உணர்த்திநின்று, அறுவகைப் பொருட்பெயருள் ஒன்றினைக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் "தெரிநிலை பெயரெச்சம்" ஆகும்.

(எ.கா) படித்த மாணவன்.

படிக்கின்ற மாணவன்.

படிக்கும் மாணவன்.

இவ்வாறு காலத்தையும், செயலையும் தெளிவாக உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லை(மாணவன்), கொண்டு முடிவுற்றதால் இது "தெரிநிலை பெயரெச்சம்" ஆகும்.

குறிப்பு பெயரெச்சம் : காலத்தையோ, செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்ச(முடிவுறா) சொல் குறிப்புப் பெயரெச்சம்.

(எ.கா) நல்ல மாணவன்.

அழகிய மலர்.

நல்ல, அழகிய என்னும் சொற்கள் காலத்தையோ, செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. காலத்தினை வெளிப்படையாக உணர்த்தாமல், குறிப்பினால் மட்டுமே உணர்த்துவதால் "குறிப்பு பெயரெச்சம்".

**வினையெச்சம்:**

வினையெச்சம் என்பது வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் எச்சவினைச்சொல் ஆகும்.

**தெரிநிலை வினையெச்சம்:**

காலத்தையும், செயலையும் உணர்த்தி நின்று வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் எச்சவினை சொல்

தெரிநிலை வினையெச்சம்.

(எ.கா) படித்துத் தேறினான்.

பறந்து சென்றன.

**குறிப்பு வினையெச்சம்:**

காலத்தை விழிப்படையாக உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி, வினைமுற்றினை கொண்டுமுடிவுறும் எச்சவினைச்சொல்

குறிப்பு வினைச்சொல்

(எ.கா) மெல்ல நடந்தான்.

பணம் இன்றி வாடினான்.

வினைச்சொல் என்பது ஒரு பொருளின்/ஒன்றன் வினையை உணர்த்துவதாகும்.

முடிவு பெற்ற வினைச்சொல் "முற்று" எனப்படும்.

முடிவுறாத வினைச்சொல் "எச்சம்" எனப்படும்.

முற்று: செயல் முற்றுப் பெற்றதைக் குறிக்கும் வினைச்சொல் முற்று.

தெரிநிலை வினைமுற்று

குறிப்பு வினைமுற்று

**தெரிநிலை வினைமுற்று:**

"ஓவியர் ஓவியம் தீட்டினார்".

இத்தொடரில் "ஓவியன்" என்பது உயர்திணை என்றும், அவர் "ஆண்பால்"-என்பதும்,"இறந்தகாலம்"- என்பதும்
தெளிவாகத் தெரிகிறது.

மேலும்,

செய்பவன் - ஓவியன்
கருவி - தூரிகை வண்ணம்
நிலம் - சுவர்(அ)திரைச்சீலை(அ)காகிதம்
செயல் - தீட்டுதல்
செயல்பொருள் - ஓவியம்
காலம் - இறந்த காலம்

இவ்வாறு செய்வபன் , கருவி, நிலம், செயல், செயல்பொருள், காலம், இவற்றை தெளிவாக உணர்த்துவது
தெரிநிலை வினைமுற்று.

குறிப்பு வினைமுற்று:

திணை,பால், மட்டுமே வெளிப்படையாக காட்டுவது குறிப்பு வினைமுற்று. இதில் காலம் குறிப்பாக வரும்.

(எ.கா) "எழிலன் இனியன்"

இதில் இனியன் என்பது குறிப்பு வினைமுற்று. தொழில், காலம் வெளிப்படையாக காட்டப்படவில்லை. இனிய பண்பை உடையவனாக இருந்தான், இருக்கிறான், இருப்பான் எனக் குறிப்பால் காலத்தை உணர்த்துகிறது

இவ்வாறு செய்பவனை மட்டும் வெளிப்படையாக உணர்த்தி, பிறவற்றைக் குறிப்பாக உணர்த்தும் வினைக்குற்று குறிப்பு வினைமுற்று ஆகும். அறுவகை பெயர்களின் அடிப்படையில் குறிப்பு வினைமுற்று வரும்.

அவை பின்வருமாறு,

புகழேந்தி பொன்னன் - பொருள்
அங்கையற்கன்னி மதுரையாள் - இடம்

செல்வி திருவாதிரையாள் - காலம்
வள்ளல் செங்கண்ணன் - சினை
எழிலன் இனியன் - பண்பு
அகிலன் நடிகன் - தொழில்

எச்சவினை (அ) எச்சம்:

தமிழில் சொல்லோ, சொல்லின் பொருளோ முழுமைப் பெறாமல் குறைந்து நிற்பதை "எச்சம்" எனும் சொல்லால் குறிக்கப்படுகின்றன.

"எஞ்சு பொருட் கிளவி" - தொல்காப்பியம்.

பொருள்: எஞ்சிய, அதாவது சொல்லாமற் குறைபட்ட பொருளைக் குறிக்கும் சொல்.

(1) எச்சம் என்பது, தன் அளவில் பொருள் முற்றுப் பெறாததாய் இருக்கும்.
(2) பெயர்ச்சொல்லையோ, வினைச்சொல்லையோ கொண்டு முடிவதாய் அமையும்.
(3) காலம் காட்டும் செயலை உணர்த்தும்.
(4) திணை, பால், எண், இடம் உணர்த்தாது.
(5) வினைப்பகுதியைக் கொண்டிருக்கும், எச்சத்திற்கு உரிய விகுதியைப் பெற்றிருக்கும்.

(எ.கா) (1) பெயர்ச்சொல் கொண்டு முடிவன :

வந்த பையன்
உண்ட குதிரை

(2) வினைச்சொல் கொண்டு முடிவன:

உண்டு வந்தான்

ஓடி வந்தது

### 5.1.1 எச்சமும் முற்றும்

பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் 'உண்ட' என்னும் எச்சச் சொல்லை, 'உண்+ட்+அ' எனப் பிரிப்பர். இதில் உள்ள 'அ' என்னும் விகுதியைக் கொண்டு, திணை, பால், எண், இடங்களை அறிய இயலாது. அடுத்து வரும் பெயர்ச் சொல்லைக் கொண்டே பொருள் முழுமை பெறும்.

வினைச் சொல்லைக் கொண்டு முடியும் 'உண்டு' என்னும் எச்சச் சொல்லை, 'உண்+ட்+உ' எனப் பிரிப்பர். இதில் உள்ள 'உ' என்னும் விகுதியைக் கொண்டு, திணை, பால், எண், இடங்களை அறிய இயலாது. அடுத்து வரும் வினைச் சொல்லைக் கொண்டே பொருள் முழுமை பெறும்.

வினைமுற்றுச் சொல்லாகிய 'உண்டான்' என்பதை, 'உண்+ட்+ஆன்' எனப் பிரிப்பர். இதிலுள்ள 'ஆன்' என்னும் விகுதியைக் கொண்டு, உயர்திணை, படர்க்கை, ஆண்பால், ஒருமை என அனைத்தையும் அறிகின்றோம்.

எனவே, பொருள் எஞ்சி நிற்பது எச்சம் எனவும், பொருள் முற்றுப்பெற்று நிற்பது முற்று எனவும் அழைக்கப்பட்டன.

### 5.1.2 எச்ச வகைகள்

எச்சம் இரு வகைகளில் முடியும் என்று கண்டோம். அவற்றுடன், பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சம், பெயரெச்சம் எனப்படும். வினைச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சம், வினையெச்சம் எனப்படும்.

(எ.கா) பெயரெச்சம் - உண்ட பையன்

வினையெச்சம் உண்டு வந்தான்

பெயரெச்சம்:

பெயர்ச்சொல்லை ஏற்று முடிவுறும் எச்ச(முடிவுறா) வினைச்சொல் ஆகும். காலத்தையும், செயலையும் உணர்த்திநின்று, அறுவகைப் பொருட்பெயருள் ஒன்றினைக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் "தெரிநிலை பெயரெச்சம்" ஆகும்.

(எ.கா) படித்த மாணவன்.
படிக்கின்ற மாணவன்.
படிக்கும் மாணவன்.

இவ்வாறு காலத்தையும், செயலையும் தெளிவாக உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லை(மாணவன்), கொண்டு முடிவுற்றதால் இது "தெரிநிலை பெயரெச்சம்" ஆகும்.

குறிப்பு பெயரெச்சம் : காலத்தையோ, செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்ச(முடிவுறா) சொல் குறிப்புப் பெயரெச்சம்.

(எ.கா) நல்ல மாணவன்.
அழகிய மலர்.

நல்ல, அழகிய என்னும் சொற்கள் காலத்தையோ, செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. காலத்தினை வெளிப்படையாக உணர்த்தாமல், குறிப்பினால் மட்டுமே உணர்த்துவதால் "குறிப்பு பெயரெச்சம்".

## வினையெச்சம்:

வினையெச்சம் என்பது வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் எச்சவினைச்சொல் ஆகும்.

தெரிநிலை வினையெச்சம்:

காலத்தையும், செயலையும் உணர்த்தி நின்று வினைமுற்றினைக் கொண்டு முடிவுறும் எச்சவினை சொல் தெரிநிலை வினையெச்சம்.

(எ.கா) படித்துத் தேறினான்.

பறந்து சென்றன.

குறிப்பு வினையெச்சம்:

காலத்தை விழிப்படையாக உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி, வினைமுற்றினை கொண்டுமுடிவுறும் எச்சவினைச்சொல் குறிப்பு வினைச்சொல்

(எ.கா) மெல்ல நடந்தான்.

பணம் இன்றி வாடினான்.

11. தன்மைப் பன்மைக்கான வினைமுற்று விகுதிகள்

அம் - உண்டனம்

ஆம் -உண்டாம்

எம் -உண்டனெம்

ஏம் - உண்டேம்

கும் -உண்கும்

டும் - உண்டும்

தும் - வருதும்

றும் - சேறும்

12. தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்

கு - உண்கு

டு - உண்டு

து - வருது

று - சேறு

என் - காண்பென்

ஏன் - காண்பேன்

அல் - காண்பல்

13. உயர்திணை படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதிகள்

அன் - வந்தனன்

ஆன் - வந்தான்

அள் - வந்தனள்

ஆள்- வந்தாள்

14. உயர்திணை படர்க்கை பன்மை வினைமுற்று விகுதிகள்

அர் - வந்தனர்

ஆர் - வந்தார்

ப - வருப

மார் - கொண்மார்

15. உயர்திணை வினைமுற்று விகுதிகள் [ஈறுகள்] எத்தனை?

16. யார் என்னும் வினாச்சொல் எப்பாலுக்கு உரியது?

உயர்திணையின் முப்பாற்கும் உரியது

17. செய்யுளில் திரியும் தன்மை ஈறுகள் யாவை?

ஆகார ஈற்றயல் சொற்களாம் ஆன், ஆள். ஆர் - உள்ள ஆ - ஓ ஆகும்.

[வந்தான் - வந்தோன், வந்தாள் - வந்தோள், வந்தார் - வந்தோர்]

18. செய்யுளில் திரியும் முன்னிலை ஈறு யாது?

ஆய் - இல் உள்ள ஈற்றயலாம் ஆ - ஓ என்றாகும். [வந்தாய் - வந்தோய்]

<u>வினைமுற்று விகுதிகள்</u>

படர்க்கை - ஆண்பால் - அன், ஆன்

படர்க்கை - பெண்பால் - அள் , ஆள்

படர்க்கை - பலர் பால் - அர் , ஆர் , ப, மார்

படர்க்கை - ஒன்றன்பால் - கு, டு , து, று

படர்க்கை - பலவின்பால் - அ, ஆ [ஆ- எதிர்மறை ]

ஒருமை - தன்மை. - கு, டு , து, று , அ ல், அன்

பன்மை - தன்மை - அம், ஆம், எம், ஏம், உம், கு, டு , து, று

ஒருமை - முன்னிலை - ஐ, ஆய், இ, ஈ, ஏ

பன்மை - முன்னிலை - இர், ஈ

வியங்கோள் - க, ய, ர

19. அஃறிணை படர்க்கை பலவின் பால் வினை முற்று விகுதிகள் யாவை?

அ - பறந்தன

ஆ - வாரா [எதிர்மறை]

வ - வருவ, செல்வ

20. படர்க்கை ஒன்றன்பால் வினை முற்று விகுதிகள் யாவை?

து - வந்தது, சென்றது

று - வந்தன்று

டு - குறுந்தாட்டு [குட்டையான கால் உடையது]

21. அஃறிணை குறிப்பு வினைகள் யாவை?

இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, பண்பை உணர்த்தும் சொல், உள என்னும் சொல், பண்பை அடுத்த சினையை அடையாகக் கொண்ட முதற்பொருள், ஒப்புமை குறித்து வரும் சொல், அன்னது, அனையது, போன்றது, அன்ன, போல்வன ஆகிய 10 வினைகள் அஃறிணை குறிப்பு வினைகள்.

21. விரவுதிணை வினைகள் யாவை?

முன்னிலை, வியங்கோள், வினையெஞ்சுக் கிளவி [வினையெச்சம்],

இன்மையைக் குறிக்கும் இல்லை எனும் குறிப்பி வினை முற்று, வேறு எனும்

வேறுபாட்டை உணர்த்தும் குறிப்பு வினை முற்று, செய்மன வாய்ப்பாட்டு

வினைச்சொல், செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினை முற்று, பெயரெச்சம்,

செய்த என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சச் சொல் - எட்டும் இருதிணைக்கும்

விரவும் வினைகள்

22. ஒருமைக்கும் ஒருவருக்கும் ஒப்பத்தோன்றும் சொற்கள் யாவை?

இ, ஐ, ஆய் ஆகியவற்றை ஈறாகக் கொண்ட முன்னிலை வினைகள்.

[வருதி. போதி, நின்றனை, கண்டனை, வந்தாய், செல்வாய்]

23. பலர்பால், பலவின் பாலுக்கு ஒத்த முன்னிலைப் பன்மை வினைகள்?

இர், ஈர், மின் [உண்பிர், கண்டிர், சென்றீர், வருவீர், நின்மின், செல்மின்

24. செய்யும் என்னும் வினைமுற்று எவற்றோடு பொருந்தி வரும்?

படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின் பால்

போன்றவற்றோடு பொருந்தி வரும். பிறவற்றோடு பொருந்தா.

[அவன் பார்க்கும், அவள் சிரிக்கும், குயில் கூவும், மாடுகள் மேயும்]

25. <u>வினையெச்ச வாய்ப்பாடு</u>

செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய
செயற்கு

26. <u>பெயரெச்ச வாய்ப்பாடு:</u>

| | | |
|---|---|---|
| இறந்த காலம் | - | செய்த |
| நிகழ்காலம் | - | செய்கின்ற |
| எதிர்காலம் | | செய்யும் |

27. வினைமுற்று வகைகள்:

1, தெரினிலை வினைமுற்று
2. குறிப்பு வினைமுற்று
3. தன்மை வினைமுற்று
4. முன்னிலை வினைமுற்று
5. படர்க்கை வினைமுற்று
6. ஏவல் வினைமுற்று
7. வியங்கோள் வினைமுற்று
8. ஐம்பால் வினைமுற்று
9. உளப்பாட்டு தன்மைப்பன்மை வினைமுற்று
10. உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று

28. ஏவல் வினைமுற்றுக்கான வினைப் பகாபதங்கள் எத்தனை? 23

[நட, வா, மடி, சீ, விடு, கூ, ஏ, வை, நொ, பொருந், திரு, தின், தேய், பார், செல், வாழ், கேள், அஃகு]

29. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை? க, இய, இயர்

30. வியங்கோள் வினைமுற்றுக்கான பொருண்மைகள் யாவை?

வாழ்த்தல், விதித்தல், வேண்டல், வைதல்

31. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றுகள் யாவை?

அம், ஆம், கும், டும், ஓம்

32. உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள் யாவை?

இர், ஈர், மின்

33. முற்றெச்சம் என்பது என்ன?

வினைமுற்று எச்சப் பொருளில் வந்து வினை கொண்டு முடிவது.

## வினாக்கள்

1. வினையெனப்படுவது எவ்வாறு வரும்?

வேற்றுமை ஏற்காது, காலம் காட்டும்.

2. காலம் எத்தனை வகைப்படும்?

3. முக்காலங்கள் யாவை? இறப்பு, நிகழ்வு, எதிர்வு

4. வினைச்சொற்கள் எப்படி காலம் காட்டும்?

வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ காலம் காட்டும்.

5. சொற்கள் பொருளுணர்த்தும் விதத்தில் எத்தனை வகைப்படும்?

2 [தெரிநிலை, குறிப்பு]

6. **தெரிநிலை  வினையைத் தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்**?

**வினை**

7. **குறிப்பு வினையைத் தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பார்**?

**குறிப்பு**

8. **தெரிநிலை  வினையாவது யாது**?

**கர்த்தா**, **கருவி**, **நிலம்**, **செயல்**,  **காலம்**, **செய்பொருள் ஆறும் வெளிப்படக் காட்டுவது**. [**சென்றான்**, **உழுதான்**, **உண்டான்**]

9. **குறிப்பு வினையாவது யாது**?

**வினைமுதலாகிய கர்த்தாவை மட்டும் வெளிப்படையாகக் காட்டுவது**.

[**குழையினன்**,**பொன்னினன்**]

10. **வினைச்சொல்** - '**அம்மூவுருபினத் தோன்றலாறே**' - **மூவுரு யாவை**?